இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 314 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 09 – சனிக்கிழமை 24 ஜூன் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 314 : Thiruvalluvar Year - 2054 - Aani 09 - Saturday 24 June 2023 - Chennai 12 Pages ₹ 5.00



பீகார் மாநிலம், பாட்னாவில் நேற்று (23.6.2023) ஐக்கிய ஜனதா தள கட்சித் தலைவரும், பீகார் மாநில முதலமைச்சருமான நிதிஷ் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார், ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் தலைவரும், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சருமான லல்லு பிரசாத் யாதவ், திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்க மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, ஆம் ஆத்மி கட்சித் தலைவரும் தில்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் தலைவரும், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சருமான ஹேமந்த் சோரன், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் துணைத் தலைவரும் முதலமைச்சருமான உமர் அப்துல்லா, சமாஜ்வாடி கட்சியின் தலைவரும், உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், சிவ சேனா கட்சித் தலைவரும், மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதலமைச்சருமான உத்தவ் தாக்கரே, ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் திருமதி மெகபூபா முப்தி, மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. நிச்சயம் தோற்கடிக்கப்படும்!

# நம்பிக்கையும், மகிழ்ச்சியும் தந்த பாட்னா கூட்டம்!

## பீகார்: ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பங்கேற்று - சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை,ஜூன்.24–**

**பீகார் மாநிலம் பாட்னாவில் மக்களவைத் தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்த 16 எதிர்க் கட்சிகளின் ஒருங்கிணைந்த குழுக் கூட்டத்தில் பங்கேற்று விட்டு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.06.2023) மாலை சென்னை திரும்பினார்.**

**சென்னை திரும்பிய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில்,**

**வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. நிச்சயம் தோற்கடிக்கப்படும் என்றும், மிகுந்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையும் உருவாக்குவதாக இந்த பாட்னா கூட்டம் அமைந்திருந்தது என்றும் குறிப்பிட்டார்.**

பீகார் மாநிலம், பாட்னாவில் நேற்று (23.6.2023) நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக பல்வேறு கட்சிகளின் கலந்தாலோசனைக் கூட்டம் பீகாரின் தலைநகரான பாட்னாவில் நடைபெற்றது.

அதில் கலந்துகொள்வதற்காக நானும் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களும் சென்றிருந்தோம்.

மிகுந்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் உருவாக்குவதாக இந்தக் கூட்டம் அமைந்திருந்தது.

**லாலு பிரசாத் யாதவுடன் உற்சாகம் தந்த சந்திப்பு!**

அகில இந்திய தலைவர்கள் அனைவரையும் நான் சந்தித்தேன். குறிப்பாக நேற்று மாலை நான் பாட்னா சென்றவுடன் விமான நிலையத்திலிருந்து நேரடியாக மதிப்பிற்குரிய லாலு பிரசாத் யாதவ் அவர்களது இல்லத்திற்கு சென்று, அவருடைய உடல்நிலை விசாரித்து, சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அது எனக்கு பெரிய உற்சாகத்தை தந்தது.

ஒன்றிய அளவில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்துவது என்பதை நோக்கமாகக் கொண்டதாக இந்தக் கூட்டத்தை பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் கூட்டியிருந்தார்கள்.



பீகார் மாநிலம், பாட்னாவில் நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய பிறகு விமான நிலையத்தில் நேற்று (23.6.2023) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

பா.ஜ.க. என்று சொல்வதால் ஏதோ ஒரு தனிப்பட்ட ஒரு கட்சிக்கு எதிரான கூட்டமாக மட்டும் இதனை யாரும் நினைக்க வேண்டாம்.

**ஜனநாயகத்தைக் காப்பாற்ற பா.ஜ.க.வை வீழ்த்த நடந்த கூட்டம்!**

இந்தியாவின் ஜனநாயகத்தை – மக்களாட்சியை – மதச்சார்பின்மையை – பன்முகத்தன்மையை – ஒடுக்கப்பட்ட மக்களை – ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் பா.ஜ.க. மீண்டும் ஒரு முறை ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் அனைத்துக் கட்சிகளும் மிகத்தெளிவாக இருக்கிறோம்.

இதில் கடைசி வரை உறுதியாக இருக்க வேண்டும் என்பதை நான் இன்று காலை பேசுகிறது போது நான் குறிப்பிட்டு சொன்னேன்.

2023 ஜூன் 23 ஆம் தேதி கூடினார்கள் 2024 மே மாதம் வெற்றி பெற்றார்கள் என்பது மட்டும்தான் வரலாற்றில் பதிவாக வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் நான் அழுத்தம்திருத்தமாகப் பேசினேன்.

மதச்சார்பற்ற கட்சிகளின் ஒற்றுமைதான் தமிழ்நாட்டில் அடைந்த அனைத்து வெற்றிக்கும் காரணமாக அமைந்தது.

அதேபோல் அகில இந்திய அளவிலும் ஒற்றுமைதான் முக்கியம் என்பதை நான் வலியுறுத்தி வற்புறுத்தி எடுத்துச் சொன்னேன்.

சில முக்கியமான ஆலோசனைகளையும் நான் அந்த கூட்டத்திலே வழங்கினேன்.

**இந்தியாவின் ஜனநாயகத்தை – மக்களாட்சியை – மதச்சார்பின்மையை – பன்முகத்தன்மையை – ஒடுக்கப்பட்ட மக்களை – ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் பா.ஜ.க. மீண்டும் ஒரு முறை ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் அனைத்துக் கட்சிகளும் மிகத்தெளிவாக இருக்கிறோம்.**

**பாட்னா கூட்டத்தில் நான் முன்வைத்த முக்கிய ஆலோசனை!**

உதாரணமாக எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி செல்வாக்குடன் இருக்கிறதோ அந்தக் கட்சி தலைமையில் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம். கூட்டணியாக அமைக்க முடியவில்லை என்றால் தொகுதிப்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## மக்களவைத் தேர்தலில்

# பா.ஜ.க.வை வீழ்த்த 16 எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைப்பு!

## மு.க.ஸ்டாலின் உட்பட 6 முதலமைச்சர்கள் - ராகுல்காந்தி உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்!

பாட்னா, ஜூன் 24–

மக்களவைத் தேர்தலில் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்த்த 16 எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று பாட்னாவில் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் இல்லத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட 6 முதலமைச்சர்களும் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்ட 16 கட்சிகளின் முக்கியத் தலைவர்களும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

பா.ஜ.கவை வீழ்த்த எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன.பாட்னாவில் 16 கட்சிகளின் தலைவர்கள் நேற்று கூடி முக்கிய ஆலோசனை நடத்தினர்.

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிராக, தேசிய அளவில் வலுவான கூட்டணியை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய ஜனதா தளத் தலைவரும், பீகார் முதலமைச்சரு மான நிதிஷ்குமார் மேற்கொண்டு வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக பாட்னாவில் மதச்சார்பற்ற கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் தலைவர் ராகுல்காந்தி, தி.மு.க தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சரு மான மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், ராஷ்டிரிய ஜனதா தளம் சார்பில் லாலு பிரசாத், தேஜஸ்வி, திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்குவங்க முதலமைச்சருமான மம்தா பானர்ஜி, ஆம் ஆத்மி சார்பில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான், சிவசேனா கட்சி சார்பில் உத்தவ் தாக்கரே, சஞ்சய் ராவத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா ஆகியோரும் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

தேசிய மாநாட்டுக் கட்சி தலைவரும், காஷ்மீர் முன்னாள் முதலமைச்சருமான உமர் அப்துல்லா, மக்கள் ஜனநாயகக்கட்சி தலைவரும், காஷ்மீர் முன்னாள் முதல்வருமான மெகபூபா முஃப்தி, சமாஜ்வாதி கட்சித் தலைவரும், உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரும், ஜார்க்கண்ட் முதலமைச்சரு மான ஹேமந்த் சோரன் ஆகியோரும் பாட்னா கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதற்காக பாட்னா சென்றுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசிய தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

எதிர்க்கட்சிகளின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் பாட்னா சென்ற தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்